# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

## 2020 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 04 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி

*(2020.09.04 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*


# நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி (திருத்தம்)

**2009 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, நாட்டைக் கட்டியெழுப்புதல் வரிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

*பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள்அமைச்சர், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

---

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 6.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**சட்டப்பயன்பற்றிய கூற்று**

***வாசகம் 2 :*** *இவ்வாசகம், 2009 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, நாட்டைக் கட்டியெழுப்புதல் வரிச்சட்டத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, சொல்லப்பட்ட சட்டத்தின்கீழ் நாட்டைக் கட்டியெழுப்புதல் வரியின் ஏற்புடைமைக் காலப்பகுதியை 2019, திசெம்பர் 1 ஆந் திகதிக்கு முன்னரான காலப்பகுதிக்கு வரையறுப்பதாகும்.*

ச. வ- ஒ. 59/2019

## 2009 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, நாட்டைக் கட்டியெழுப்புதல் வரிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப் பெயர்.*

**1.** இச்சட்டம், 2020 ஆம் ஆண்டின்      ஆம் இலக்க, நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

*2009 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்கச் சட்டத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**2.** இரண்டாயிரத்துப் பத்தொன்பதாமாண்டின் 20 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான, 2009 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, நாட்டைக் கட்டியெழுப்புதல் வரிச்சட்டத்தின் 3 ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவில், "ஒவ்வோர் ஆளிடமிருந்தும் பின்வரும் முறையில் இறுக்கப்படுதல் வேண்டும்:-" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஒவ்வோர் ஆளிடமிருந்தும் 2019, திசெம்பர் 1 ஆந்தேதிக்கு முன்னர் பின்வரும் முறையில் இறுக்கப்படுதல் வேண்டும்:-" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப் படுகின்றது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**3.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.